**கொழும்பை அண்டிய புகையிரதச் செயற்திட்டத்தின் கீழான போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதியின் - 2018**

---

கொழும்பை அண்டிய புகையிரதச் செயற்திட்டத்தின் கீழான பேக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதியின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஒக்தோபர் 28 ஆம் திகதிய 3425 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவுள்ளதுடன் இலங்கைப் புகையிரதத் திணைக்களம் அமுலாக்கல் முகவராகவுள்ளது. போக்குவரத்துச் செயற்திட்டங்களிற்கான சாத்தியவள ஆய்வுகள் மற்றும் விபரமான பொறியியல் வடிவமைப்புக்கள் என்பவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் பேக்குவரத்துச் செயற்திட்டங்களிற்கு துணைபுரியும் அமுல்ப்படுத்தல் நிதியேற்பாடுகள் உள்ளடங்கலாக முன்னுரிமை போக்குவரத்துச் செயற்திட்டங்களின் தயார்நிலையை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,853 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 11.36 மில்லியன் தொகையானதுடன் இதில் ரூபா 1,405.06 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 9.69 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியிடப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 447.94 மில்லியன் மீதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஒக்தோபர் 28 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம்

தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடு

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | களனிப் பள்ளத்தாக்கு புகையிரதப் பாதைக்கருகில் வாழுகின்ற குடியிருப்பாளர்களை மீளக்குடியமர்த்துவதற்காக 1,052 குடியிருப்பு அலகுகளை நிர்மாணிப்பதற்கு செயற்திட்டத்தால் கைச்சாத்திடப்பட்ட 05 புரிந்துணர்வு விஞ்ஞாபனங்களின் கீழ் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 2,545 மில்லியன் தொகை | குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நகர அபிவிருத்தி அதிகாரசபையால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் சட்ட ரீதியான உரித்து செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருக்காததால் இச் செலுத்த வேண்டிய தொகையை கணக்கிற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் இது நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் செலுத்த வேண்டிய தொகை கணக்கிற்கு கொண்டுவரப்பட வேண்டும். அல்லது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | செயற்திட்டத்தால் வேலையிலீடுபடுத்தப்பட்ட மதியுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 3.39 மில்லியன் தொகையான தாமதக் கட்டணங்கள் நிதிக்கூற்றுக்களில் பொதுத் திறைசேரிக்கு செலுத்த வேண்டியவையாக காட்டப்பட்டிருந்தன. | செலுத்த வேண்டியவைகள் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | கருத்துரையுடன் இணக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டுத் தவறு சீர்செய்யப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| **சட்டங்கள், விதிகள்மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | **விளைவு** | **முகாமைத்துவ கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016 மார்ச் 24 இன் 1/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | வெளிநாட்டு வளங்களிலிருந்தான செயற்திட்டத்தின் ஆரம்ப முதலீடு ஐ.அ.டொலர் 15 மில்லியனை விடக் குறைவாக இருந்ததனால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016 மார்ச் 24 இன் 1/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் அட்டவணை 01 இன் முதலாவது வகைப்படுத்தலின் கீழ் செயற்திட்டப் பதவியணியினரின் சம்பள அளவுத்திட்டங்கள் தீர்மானிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சரவையானது அதன் மீதான செயற்திட்ட | சுற்றறிக்கை அறிவுறுத்தலை தவறாக விளங்கிக் கொள்ளல் | தேவையான தின்கள் மற்றும் தகைமைகளுடனான பதவியணியினர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு அமைச்சரவை அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னுரைக்கப்பட்ட நிதி ஒழுங்குகளை கருத்தில் கொண்டு கிடைக்கக்கூடிய நிதி ஒதுக்கீடுகள் ஊடாக செயற்திட்டப் பதவியணியினரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளின் நோக்கெல்லை மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் அதற்கிணங்க சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரயோகிக்கப்பட வேண்டும். |

நடவடிக்கைகளை விஸ்தரித்து ஐ.அ.டொலர் 135 மில்லியனை முதலீடு செய்வதற்கு 2018 மே 16 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் தீர்மானித்திருந்தது. அத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி செயற்திட்டப் பதவியணியினரின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தது. எனினும் செயற்திட்ட முன்மொழிவுகளை அமுல்ப்படுத்துவதற்கு வெளிநாட்டு நிதிகளை பெறுவதற்கான ஒழுங்குகள் காணப்பட்டிருக்கவில்லை.

## 3. பௌதீக செயன்முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

களனிப் பள்ளத்தாக்கு புகையிரதப் பாதை வரிசையை வடிவமைத்து முன்னேற்றும் நோக்கங்களிற்காக மதியுரை சேவைகளை வழங்குவதற்காக செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 379.21 மில்லியனிற்குச் சமமான யூரோ 256,030 (ஐ.அ.டொலர் 6.48 மில்லியன்) மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2017 திசெம்பர் 13 இல் வெளிநாட்டு மதியுரை நிறுவனமொன்றிற்கு ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் வடிவமைப்பு மதியுரையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட சாத்தியவள ஆய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றின் அறிக்கைகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மேலும் தேவையான ஆய்வுகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்த அதே நேரம் களனிப் பள்ளத்தாக்கு புகையிரதப் பாதை வரிசையின் விபரமான வடிவமைப்பு வேலைகளில் 30 சதவீதம் மீளாய்வாண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.